# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண். 57/2020

வா.சா.1– குறுக்கு விசாரணை தொடர்ச்சி – நாள் 24–11–2025.

பெயர் = கோவிந்தராஜ் வா.சா.1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி. தொடர்ச்சி–

1) சர்வே எண்.107/215/C இடமானது நம்மாழ்வார் நாயக்கர் இடம் என்றால் சரிதான். அந்த இடம் முழுவதையும் பிரேமலதா என்பவர் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் ஒரு பகுதியை கண்ணன் என்பவரும், ஒரு பகுதியை பிரேமலதா வாங்கியுள்ளார் என சாட்சி கூறுகிறார். கண்ணன் தெற்கு கடைசியிலும், பிரேமலதா வடக்கு கடைசியிலும் வாங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். பிரேமலதாவிற்கு தாவா சொத்து 2 கிரயபத்திரங்கள், 1 உயில் மூலம் பாத்தியம் என்றால் சரியல்ல. ஆணையர் தன்னுடைய வரைபடத்துடன் சர்வே பிளான் இணைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வரைபடத்தில் சர்வே எண்.107/215C ஒரே சேகரமாக உள்ளது என்றால் சரிதான். கிழமேல் பாதை வரைபடத்தில் உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை சொந்தபாதை என உரிமை கேட்கிறேனா அல்லது அனுபவ உரிமை கேட்கிறேனா என்றால் இத்தனை வருடங்களாக பாதையாக அனுபவம் செய்து வந்துள்ளேன் என்ற உரிமையில் கேட்கிறேன் என சாட்சி கூறுகிறார். என்னுடைய இடத்திற்கு பத்திரம் உள்ளதா என்றால் ஆமாம்.

2) பரிவர்த்தனை பத்திரம் உள்ளது. எந்த வருடம் ஏற்பட்டது என்றால் ஞாபகமில்லை. பரிவர்த்தனை பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எனக்கும், பிரேமலாவிற்கும் தனிப்பட்ட முறையில் விரோதம் இல்லை என்றால் சரிதான். என் வீட்டிற்கும், பிரேமலதா வீட்டிற்கும் வடக்கே யார் இடம் உள்ளது என்றால் காலிமனை உள்ளது. சர்வே எண்.107/213 என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.107/213 ற்கு வடக்கே 107/215AB உள்ளது என சாட்சி கூறுகிறார். சர்வே எண்.107/215 AB பிரேமலதாவின் உடன்பிறந்த சகோதரர்கள் அழகர்சாமி, போத்திராஜ் ஆகியோர் பெயரில் உள்ளது என சாட்சி கூறுகிறார். 107/215AB க்கு வடக்கே கிழமேல் ரோடு உள்ளது.

சர்வே எண்.107/217 யாருடையது என்றால் வெங்கட்ராமன்(2ம்வாதி) இடம் என சாட்சி கூறுகிறார். வடக்கே உள்ள கிழமேல் ரோட்டில் இருந்து சர்வே எண்.107/216, 107/217 ற்கு வரலாம் என்றால் வரமுடியாது. 107/216,107/217 ற்கு கிழக்கே எங்கள் இடம் உள்ளது என சாட்சி கூறுகிறார். 107/218 இடமானது வடக்கே கிழமேல் ரோடு வரை உள்ளது என்றால் சரிதான். நான் அந்த ரோட்டிலிருந்து 107/218 க்கு வரலாம் என்றால் சரிதான். 107/218 லிருந்து 107/216, 107/217 ற்கு போகமுடியும் என்றால் வர முடியாது என சாட்சி கூறுகிறார். 107/218 காலிமனையாக உள்ளது என்றால் சரியல்ல. வீடு உள்ளது. வீடு போக 1.1/2 அடி சந்து உள்ளது என சாட்சி கூறுகிறார்.

3) 107/218 ல் காலிமனை உள்ளது அது வழியாகத்தான் 107/216, 107/217 ற்கு செல்லலாம் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து கிழமேல் பாதை என்பதற்கு என் தரப்பில் ஆவணங்கள் இல்லை, வருவாய் ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. பாதை உள்ளது என்பதற்கு என் தரப்பில் என்ன ஆவணம் உள்ளது என்றால் 1979 பத்திரம் உள்ளது. நானும், என் சகோதரரும் செய்துகொண்ட பாகப்பிரிவினை பத்திரமும் உள்ளது. மேலும், 107/215C ல் தாவா இடம் கட்டுப்பட்டது கிடையாது என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தின் வடக்கே, தெற்கே, வடகிழக்கே தாக்கு உள்ளது என்றால் தாவா இடத்திற்கு வடக்கே காலிஇடமாகவும் தெற்கேவீடும் உள்ளது. வடகிழக்கே தாக்கு இல்லை என சாட்சி கூறுகிறார். தாவாச்சொத்தை பிரதிவாதிகள் தான் அவருடைய இடத்திற்கு போக புழங்கி வந்தார்கள் வேறு யாருக்கும் அதில் பாத்தியமில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பூமியில் பாதையும் கிடையாது எனக்கு அதில் உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S